**<u>நிகழும் சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 13 ஆம் நாள் (30.09.2022)</u>**
**<u>வெள்ளிக்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் மாலை 5.00 மணிக்கு</u>**
**<u>நடைபெற்ற அவசர கூட்டப் பொருள்</u>**

**<u>பொருள் எண்.1 :</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந2) துறை 26.09.2014ஆம் தேதிய அரசாணை நிலை எண்.118இல் நாமக்கல் நகராட்சிக்கு இரண்டு அம்மா உணவகங்கள் செயல்பட உத்தரவு வழங்கியதன்படி, நாமக்கல் நகராட்சி பூங்கா சாலை –1, மற்றும் திருச்சி சாலை –2 ஆகிய இரண்டு அம்மா உணவகங்களும் செயல்பட்டு வருகிறது. இரண்டு அம்மா உணவகங்களுக்கு தேவையான மளிகை பொருட்கள் 30.09.2022 வரை கொள்முதல் செய்துகொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.192 மற்றும் 193 நாள்:17.08.2022 வாயிலாக மன்ற அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. தற்போது 01.10.2022 முதல் இரண்டு அம்மா உணவகங்களுக்கு தேவையான மளிகைப் பொருட்கள் சப்ளை செய்ய உள்ளூர் மளிகை நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று மளிகை பொருட்களை கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை அம்மா உணவகத்திலிற்கு பெறப்படும் நிதியிலிருந்தும் மற்றும் நகராட்சி பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவரசரஅவசியம் கருதி மன்ற அனுமதி எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 3609/2018/அ1)**

**தீர்மானம் எண். : 256, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 2 :</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந2) துறை 26.09.2014ஆம் தேதிய அரசாணை நிலை எண்.118இல் நாமக்கல் நகராட்சிக்கு இரண்டு அம்மா உணவகங்கள் செயல்பட உத்தரவு வழங்கியதன்படி, நாமக்கல் நகராட்சி பூங்கா சாலை –1, மற்றும் திருச்சி சாலை –2 ஆகிய இரண்டு அம்மா உணவகங்களும் செயல்பட்டு வருகிறது. இரண்டு அம்மா உணவகங்களுக்கு தேவையான காய்கறிகளை 01.10.2022 முதல் கொள்முதல் செய்ய உள்ளூர் காய்கறி நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று உழவர் சந்தையின் தினசரி காய்கறி விலைவிகிதத்தில் காய்கறிகளை கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை அம்மா உணவகத்திலிற்கு பெறப்படும் நிதியிலிருந்தும் மற்றும் நகராட்சி பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவரசரஅவசியம் கருதி மன்ற அனுமதி எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 3609/2018/அ1)**

**தீர்மானம் எண். : 257, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE TN 28 AC 9815 எண்ணுள்ள வாகனத்திற்கு மராமத்து பணிகளை TATA நிறுவனத்தின் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Sri S.A.T. மோட்டார்ஸ் மூலம் நேரடியாக பணிகள் மேற்கொள்வதற்கான செலவினத் தொகை ரூ.72,000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.29, நாள்.29.04.2022 ஆம் தேதியில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

தற்போது, மேற்படி வாகனத்திற்கு மாரமத்து பணிகள் மேற்கொண்ட TATA நிறுவனத்தின் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Sri S.A.T. மோட்டார்ஸ் நிறுவனத்தின் கேட்பு பட்டியலில், பட்டியல் தொகை ரூ.73,823/– வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, மேற்படியான மராமத்து பணிகள் மேற்கொண்டதற்கான வித்தியாச பட்டியல் தொகை ரூ.1823/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலகக்குறிப்பு__ : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2400/2022/எச்2)**

**தீர்மானம் எண். : 258, அனுமதிக்கப்பட்டது.**

__பொருள் எண். 4 :__

நாமக்கல் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் மினி ஆட்டோ வாகனம் TN 88 E 1433 எண்ணுள்ள வாகனத்திற்கு புதிய பேட்டரி விநியோகம் செய்தல் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண். 121, நாள்: 17.08.2022 இன் வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 27.08.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்றுவிலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. Sri Selvam Battery Service, Namakkal – ரூ. 4,300/–
2. Sri Kamathi to Electrica Works, Namakkal – ரூ. 4,400/–
3. New Auto Electric Service, Namakkal – ரூ. 4,000/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்றுவிலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

__அலுவலகக் குறிப்பு:__– மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்றுவிலைப்புள்ளிகளில்குறைந்த விலைப்புள்ளிசமர்ப்பித்த New Auto Electric Service, Namakkalஎன்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 4147/2022/எச்2)**

**தீர்மானம் எண். : 259, அனுமதிக்கப்பட்டது.**

__பொருள் எண். 5 :__

நாமக்கல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி வாகனம் TN28AA7916 எண்ணுள்ள வாகனத்திற்கு புதிய பேட்டரி விநியோகம் செய்தல் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.123, நாள்:17.08.2022இன் வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 27.08.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. Sri Selvam Battery Service, Namakkal – ரூ. 9,900/–
2. Sri Kamathi to Electrica Works, Namakkal – ரூ. 9,800/–
3. New Auto Electric Service, Namakkal – ரூ. 9,000/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

__அலுவலகக் குறிப்பு__ :–மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த New Auto Electric Service, Namakkal என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 4051/2022/எச்2)**

**தீர்மானம் எண். : 260, அனுமதிக்கப்பட்டது.**

__பொருள் எண். 6 :__

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 23.07.2022அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் ஆய்வுமேற்கொண்டபோது கீழ்க்கண்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்க அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணி விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | நாமக்கல் நகராட்சி சேலம் சாலை எல்.எம்.ஆர் திரையரங்கு முதல் இராமாபுரம்புதூர் சுடுகாடு வரை மழைநீர் வடிகால் அமைத்தல். | 75.00 |
| 2 | நாமக்கல் நகராட்சி பொய்யேரிக்கரை பிரதான சாலையில் மழைநீர் வடிகால் அமைத்தல். | 28.00 |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அரசு முழு மானியத்துடன் திட்ட அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலக குறிப்பு.__ மேற்கண்ட பணிக்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்க மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5890/2022/இ1)**

**தீர்மானம் எண். : 261, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 7 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **30** துறையூர் சாலை மேம்பாலத்திற்கு தெற்கு பகுதியில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் எதிர்புறம் உள்ள வடிகாலுக்கு குழாய் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் கழிவூநீர் சாலையில் செல்லும் நிலையில் உள்ளது. மேலும் திருச்சி சாலை, கணேசபுரம், ஜி.எம்.கே.நகர் மற்றும் கொசவம்பட்டி பகுதியிலிருந்து சேகராமாகும் மழைநீர் மேற்படி இரயில்வே மேம்பாலம் அருகில் இரயில்வே தண்டவாளத்தை கடந்து செல்ல வேண்டியதை இரயில்வே நிர்வாகத்தால் தடை செய்யப்பட்டு மழைக்காலங்களில் சாலையில் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழல் உள்ளது. எனவே அப்பகுதியில் இரண்டு சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**2.80**இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>.** மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5891/2022/இ1)**

**தீர்மானம் எண். : 262, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8 :</u>**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் **2021–2022**இன்கீழ் நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**34** அழகுநகர் துவக்கப்பள்ளியில் சத்துணவு சமையல் கூடங்கள் மற்றும் உணவருந்தும் பகுதி புதியதாக அமைத்தல் பணி ரூ.**6.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ4/919/2022, நாள்.29.08.2022 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக **26.09.2022** அன்று ஒப்பந்தப்புள்ளிகள்கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. S.S.Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு **0.11** சதவீதம் குறைவு
2. திரு.வி. கண்ணன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு **1.23** சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.11** சதவீதம் குறைவாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிட குறைவாகவும் சமர்ப்பித்த S.S.Construction, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 4369–9/2022/இ1)**

**தீர்மானம் எண். : 263, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 9 :</u>**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் **2021–2022**இன்கீழ் நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**8** கிருஷ்ணாபுரம் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டுதல் பணி ரூ.**15.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ4/919/2022, நாள்.29.08.2022 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக **26.09.2022** அன்று ஒப்பந்தப்புள்ளிகள்கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. S.S.Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு **0.11** சதவீதம் குறைவு
2. திரு.வி. கண்ணன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு **5.43** சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.11** சதவீதம் குறைவாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிட குறைவாகவும் சமர்ப்பித்த S.S.Construction, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 4369–8/2022/இ1)**

**தீர்மானம் எண். : 264, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **16** கந்துமுத்துசாமி தெருவில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் முழுவதும் பழுதடைந்து சாலையில் கழிவுநீர் வெளியேறுவதால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படும் சூழல் உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ. **9.00**

இலட்சம் மதிப்பீட்டில் தயார்செய்யப்பட்டு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு **26.08.2022** அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது எதிர்வரும் மழைக்காலத்தினை கருத்தில் கொண்டு மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. எனவே மேற்கண்ட பணியை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மானியத் தொகை பெறப்பட்ட உடன் அதனை ஈடுசெய்து கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.5444/2022/இ1)**

**தீர்மானம் எண். : 265, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட முதலைப்பட்டி கிராமம் சர்வே எண். 220/1A1C இல் உள்ள **2.18** ஏக்கர் பரப்பளவில் அமையும் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அனுமதி கோரிய திரு. கை.கதிர்வேள் என்பவருக்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண். NKL/5C3FGTOH/2926/2022/TCP, நாள். **08.09.2022**–ஆம் தேதிய கடிதத்தில் மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலைகள் மழைநீர் வடிகால் மற்றும் சோலார் தெரு விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளது எனவும் இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் நகராட்சிப் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி, மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தை ஒப்படைத்ததை ஏற்கலாம். சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை தானபத்திரம் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. இதன் நகலினை மனைப்பிரிவு உரிமையாளர் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, நாமக்கல் அவர்களிடம் ஒப்படைத்து, மேற்படி அசல் பத்திரத்தை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள் ஆணையாளர், நாமக்கல் நகராட்சி அவர்களுக்கு அனுப்பி உள்ளார். மனைப்பிரிவில் அமையும் சாலைகள் வடிகால்கள் மற்றும் தெருவிளக்குகள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். NKL/5C3FGTOH/2926/2022/TCP, நாள். **08.09.2022**இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.127/**2022** என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார்.

எனவே, இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :-** தானபத்திரத்தின்படி சாலைகள் பொது ஒதுக்கீடு இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்றுக்கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.5614/2022/எப்1)**

**தீர்மானம் எண். : 266, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட முதலைப்பட்டி கிராமம் சர்வே எண்கள். 215/1A2, 3A1, 3A2A, 3C1, 215/3D1A & 3D2A2 இல் உள்ள **1.92** ஏக்கர் பரப்பளவில் அமையும் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அனுமதி கோரிய திருமதி. எஸ்.மதுமிதா மற்றும் ஒருவர் என்பவருக்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண். **540/2022**/நாமா, நாள். **12.07.2022**–ஆம் தேதிய கடிதத்தில் மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலைகள் மழைநீர் வடிகால் மற்றும் சோலார் தெரு விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளது எனவும் இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் நகராட்சிப் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி, மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தை ஒப்படைத்ததை ஏற்கலாம். சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை தானபத்திரம் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. இதன் நகலினை மனைப்பிரிவு உரிமையாளர் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, நாமக்கல் அவர்களிடம் ஒப்படைத்து, மேற்படி அசல் பத்திரத்தை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள் ஆணையாளர், நாமக்கல் நகராட்சி அவர்களுக்கு அனுப்பி உள்ளார். குடிநீர் வசதி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.**3,50,000/–** ஐ நகராட்சிக்கு மனுதாரர்

செலுத்த வேண்டும் என நகராட்சி பொறியாளர் அவர்கள் வழங்கிய குறிப்பின் அடிப்படையில் மனைப்பிரிவில் அமையும் சாலைகள் வடிகால்கள் மற்றும் தெருவிளக்குகள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். ந.க.எண். 540/2022/நாமா, நாள்.12.07.2022இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ.ந.ஊ.(நாமா) எண்.89/2022 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரா் குடிநீர் வசதி செய்வதற்கான தொகைரூ.3,50,000/–யும் மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார்.

எனவே, இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** தானபத்திரத்தின்படி சாலைகள் பொது ஒதுக்கீடு இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்றுக்கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.5256/2022/எப்1)**

**தீர்மானம் எண். : 267, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 13 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி கிராமம் சர்வே எண்கள். 266/1A1, 1A3, 2A1 & 2D2 இல் உள்ள 1.38 ஏக்கர் பரப்பளவில் அமையும் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரிய திரு. V.குணசேகரன் என்பவருக்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண். NKL/MN510CXS/2513/2022/TCP எண்ணிட்ட 06.09.2022–ஆம் தேதிய கடிதத்தில் மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலைகள் மழைநீர் வடிகால் மற்றும் சோலார் தெரு விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளது எனவும் இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் நகராட்சிப் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி, மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தை ஒப்படைத்ததை ஏற்கலாம். சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை தானபத்திரம் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. இதன் நகலினை மனைப்பிரிவு உரிமையாளர் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, நாமக்கல் அவர்களிடம் ஒப்படைத்து, மேற்படி அசல் பத்திரத்தை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள் ஆணையாளர், நாமக்கல் நகராட்சி அவர்களுக்கு அனுப்பி உள்ளார். குடிநீர் வசதி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,30,000/– ஐ நகராட்சிக்கு மனுதாரர் செலுத்த வேண்டும் என நகராட்சி பொறியாளர் அவர்கள் வழங்கிய குறிப்பின் அடிப்படையில் மனைப்பிரிவில் அமையும் சாலைகள் வடிகால்கள் மற்றும் தெருவிளக்குகள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். NKL / MN510CXS / 2513 / 2022 / TCP, நாள். 06.09.2022இல் மனைபிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.126/2022 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரா் குடிநீர் வசதி செய்வதற்கான தொகைரூ.2,30,000/–யும் மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார்.

எனவே, இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** தானபத்திரத்தின்படி சாலைகள் பொது ஒதுக்கீடு இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்றுக்கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.5427/2022/எப்1)**

**தீர்மானம் எண். : 268, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14 :</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந2) துறை 26.09.2014ஆம் தேதிய அரசாணை நிலை எண்.118இல் நாமக்கல் நகராட்சிக்கு இரண்டு அம்மா உணவகங்கள் செயல்பட உத்தரவு வழங்கியதன்படி, நாமக்கல் நகராட்சி பூங்கா சாலை –1, மற்றும் திருச்சி சாலை –2 ஆகிய இரண்டு அம்மா உணவகங்களும் செயல்பட்டு வருகிறது. இரண்டு அம்மா உணவகங்களுக்கு தேவையான மளிகை பொருட்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | பொருட்களின் விவரம் | சேலம் ஸ்டோர், கந்துமுத்துசாமி தெரு, நாமக்கல் | சின்னதம்பி டிப்பார்மெண்ட் ஸ்டோர், கொண்டிசெட்டிபட்டி, நாமக்கல். | சீனிவாசா ஸ்டோர், மோகனூர் ரோடு, நாமக்கல் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | துவரம் பருப்பு | 106 | 110 | 109 |
| 2 | உளுந்து | 115 | 137 | 130 |
| 3 | சமையல் எண்ணெய் | 143 | 162 | 160 |
| 4 | பூண்டு | 70 | 80 | 91 |
| 5 | வர மிளகாய் | 300 | 340 | 320 |
| 6 | புளி | 104 | 115 | 110 |
| 7 | மஞ்சள் தூள் | 75 | 144 | 150 |
| 8 | கடுகு | 85 | 102 | 110 |
| 9 | பெருங்காயத்தூள் (100 கிராம்) | 40 | 56.50 | 55 |
| 10 | சாம்பார் தூள் | 330 | 294 | 290 |
| 11 | கல் உப்பு | 9 | 12 | 14 |
| 12 | தூள் உப்பு | 10 | 15 | 16 |
| 13 | மிளகாய்தூள் | 195 | 288 | 280 |
| 14 | சீரகம் | 280 | 310 | 295 |
| 15 | மல்லிதூள் | 125 | 176 | 200 |
| 16 | தட்டபயிறு | 83 | 96 | 100 |
| 17 | Vim Bar (ரூ. 10/–) | 9.50 | 9.25 | 9.50 |
| 18 | Silver நார் | 9 | 8 | 15 |
| 19 | கிராம்பு | 780 | 815 | 850 |
| 20 | பட்ட | 310 | 320 | 350 |
| 21 | சோம்பு | 190 | 185 | 240 |
| 22 | மிளகு | 580 | 660 | 620 |
| 23 | வெந்தயம் | 75 | 103 | 120 |
| 24 | கடலை மாவு | 85 | 89 | 90 |
| 25 | வெள்ள அவுல் | 40 | 39 | 40 |
| 26 | ஜவ்வரிசி | 70 | 74 | 80 |
| 27 | சமையல் சோடா | 48 | 50 | 49 |
| 28 | Scotch brite | 10 | 9 | 15 |
| 29 | டால்டா | 110 | 145 | 148 |
| 30 | பொட்டு கடலை | 75 | 83 | 88 |
| 31 | கடலை பருப்பு | 66 | 79 | 80 |
| 32 | பாசி பருப்பு | 94 | 97 | 100 |
| 33 | பெனாயில் | 24 | 25 | 30 |
| 34 | லைசால் | 175 | 180 | 180 |
| 35 | பாசி பயிரு | 92 | 103 | 100 |
| 36 | கல் பாசி | 560 | 620 | 700 |
| 37 | கேசரி பவுடர் | 2 | 2 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| 38 | காடா துணி | 50 | 55 | 49 |
| 39 | துண்டு | 42 | 44 | 44 |
| 40 | வாசல் துடைப்பம் | 40 | 40 | 35 |
| 41 | மாப் | 150 | 162 | 150 |
| 42 | வீடு துடைப்பம் | 70 | 75 | 55 |
| **மொத்தம்** | | **5829.50** | **6512.75** | **6676.50** |

மேற்கண்ட மூன்று மளிகை நிறுவனங்களில் பெறப்பட்ட விலைப்புள்ளியில் அனைத்து பொருட்களையும் ஒப்பு நோக்கப்பட்டதில் ஒருசில பொருட்களின் விலை மட்டும் அதிகம் வரப்பெற்றாலும், அனைத்து பொருட்களின் மொத்த விலையில் சேலம் ஸ்டோர் நிறுவனத்தின் மொத்த தொகை ரூ.5829.50/– பைசா ஆனது மற்ற இரண்டு நிறுவனங்களிலும் வழங்கப்பட்ட மொத்த தொகையினை விட குறைவாக உள்ளதால் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கலம் எண்.3இல் உள்ள சேலம் ஸ்டோர், கந்துமுத்துசாமி தெரு, நாமக்கல் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று 01.10.2022 முதல் இரண்டு அம்மா உணவகங்களுக்கு தேவையான மளிகை பொருட்களை கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 3609/2018/அ1)**

**தீர்மானம் எண். : 269, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15 :**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந2) துறை 26.09.2014ஆம் தேதிய அரசாணை நிலை எண்.118இல் நாமக்கல் நகராட்சிக்கு இரண்டு அம்மா உணவகங்கள் செயல்பட உத்தரவு வழங்கியதன்படி, நாமக்கல் நகராட்சி பூங்கா சாலை –1, மற்றும் திருச்சி சாலை –2 ஆகிய இரண்டு அம்மா உணவகங்களும் செயல்பட்டு வருகிறது. இரண்டு அம்மா உணவகங்களுக்கு தேவையான காய்கறிகளை தினசரி உழவர் சந்தை விலைவிகிதத்தில் விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரியதில், திரு. G.பிரபாகரன், காய்கறி விற்பனையாளர், நாமக்கல் என்பவர் மட்டும் உழவர் சந்தை விலைவிகிதத்தில் அம்மா உணவகத்திற்கு தேவையான காய்கறிகளை விநியோகம் செய்ய விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். எனவே அன்னாரின் விலைப்புள்ளியை ஏற்று 01.10.2022 முதல் இரண்டு அம்மா உணவகங்களுக்கு தேவையான காய்கறிகளை கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 3609/2018/அ1)**

**தீர்மானம் எண். : 270, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16 :**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் வளர்ச்சியடைந்த கொசுக்களை அழிக்க பயன்படுத்தப்படும் கீழ்க்கண்ட புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் பழுதடைந்து இயங்க முடியாத நிலையில் உள்ளது.

1. Vehicle Mounted Fogging Machine – 2
2. Pulse Fogging (Hand) Machine – 1

மேற்கண்டவாறு பழுதடைந்துள்ள இயந்திரங்களை சரி செய்வதற்கு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. Sri Athanur Amman Traders, Namakkal – ரூ. 39,353/–
2. Sri Kaliyamman Trading Corporation, Namakkal – ரூ. 40,200/–
3. Sri Akshaya Traders, Namakkal – ரூ. 41,300/–

**அலுவலகக் குறிப்பு :–**

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த Sri Athanur Amman Traders,Namakkal என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5884/2022/எச்2)**

**தீர்மானம் எண். : 271, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 17 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் மலேரியா பிரிவிற்கு Larvicide கழிவுநீர் ஓடைகளுக்கு தெளிக்கக் கூடிய Bacillus thuringiensis (B.T) பவுடர் மிகக் குறைந்த அளவே உள்ளதால், பொது சுகாதாரத்தின் அத்தியாவசிய அவசியம் கருதி Bacillus thuringiensis (B.T) பவுடர் 200 கிலோ தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகம் அங்கீகாரம் செய்த நிறுவனங்களில் வாங்குவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5259/2022/எச்2)**

**தீர்மானம் எண். : 272, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 18 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட தெருக்களில் உள்ள வளரும் புற்களை வெட்டி சுத்தம் செய்யும் பணிக்கு புல் வெட்டும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட புல்வெட்டும் இயந்திரங்கள் வாங்கப்பட்டு சுமார் 4 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதால், அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

தற்போது மழைக்காலமாக உள்ளதால், அனைத்து தெருக்களிலும், சாலையோரங்களிலும் புற்கள் அதிகமாக வளர்ந்து பொதுமக்களுக்கு சிரமமாக உள்ளது. புற்கள் அதிகம் வளர்ந்து பாம்புகள் போன்ற விஷ சந்துக்கள் தாக்கி பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உள்ளதால், அவற்றை வெட்டி சுத்தம் செய்யும் பணிக்குக்கும் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் பொது சுகாதார நலன் கருதியும், புல் வெட்டும் இயந்திரங்கள் 10 எண்ணிக்கை வாங்குவதற்கு ஆகும் உத்தே செலவினத் தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :–** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண். 5923/2022/எச்1)**

**தீர்மானம் எண். : 273, பதிவு செய்யப்பட்டது மற்றும் அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 19 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் அலுவலக ஈப்பு வாகனம் TN 88 D 8155 எண்ணுள்ள வாகனத்திற்கு புதிய பேட்டரி விநியோகம் பணியினை அவசர அவசியம் கருதி Sri Venkateshwara Batteries, Namakkal என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொண்டதற்கான பட்டியல் தொகை ரூ.7,200/–ஐ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15) இன்கீழ் மேற்கொண்டது மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :–** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண். 55882022/எச்2)**

**தீர்மானம் எண். : 274, பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 20 :</u>**

மருத்துவர்.ந.சாந்தி, கால்நடை உதவி மருத்துவர், கால்நடை மருந்தகம், நாமக்கல் அவர்கள் நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட நல்லிபாளையம் கிராம சர்வே எண். 161/2இல் உள்ள 12 ஏர்ஸ் (29.64 செண்ட்) மந்தைவெளி நிலத்தில் உள்ள 20 செண்ட் நிலத்தினை புதிய கால்நடை மருந்தக கட்டிடம் கட்டுவதற்கு ஆட்சேபனை இல்லை என நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றி வழங்குமாறு கோரியிருந்தார்.

இதன் அடிப்படையில், மேற்படி இடம் நேராய்வு செய்யப்பட்டதில், நல்லிபாளையம் கிராம புல எண். 161/2இல் உள்ள இடத்தில் குப்பைகள் கொட்டப்பட்டு இருந்ததை, தற்போது சுகாதாரத் துறையினரால் தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்படி நல்லிபாளையம் கிராம புல எண். 161/2இல் உள்ள 29.64 செண்ட் மந்தைவெளி இடத்தில் 18.00 செண்ட் இடத்தை கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்வதில் நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என தெரிவிக்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்பட்டது.

மேலும், 29.64 செண்ட் மந்தைவெளி இடத்தை கால்நடை பராமரிப்புத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது போக மீதமுள்ள 11.64 செண்ட் நிலத்தினை நகராட்சியின் எதிர்கால தேவைக்கு (திடக்கழிவு மேலாண்மை மற்றும் இதர உபயோகத்திற்கு) பயன்படுத்திக் கொள்ள வருவாய்த் துறையினரின் முன் நுழைவு அனுமதிக்கு மன்றத்தின் அனுமதி கோரியதில், கால்நடை பராமரிப்புத் துறைக்கான 29.64 செண்ட் மந்தைவெளி

இடத்தில் 18.00 சென்ட் இடத்தை கால்நடை பராமரிப்புத்துறைக்கு ஒதுக்கீடு செய்வதற்கு நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதுமில்லை எனவும் நல்லிபாளையம் கிராம புல எண். 161/2இல் உள்ள 29.64 சென்ட் மந்தைவெளி இடத்தில் மீதமுள்ள 11.64 சென்ட் நிலத்தினை நகராட்சியின் எதிர்கால தேவைக்கு பயன்படுத்திக் கொள்ள முன் நுழைவு அனுமதியினை கோரவும் நகர்மன்ற தீர்மானம் எண். 147, நாள். 17.08.2022இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி கால்நடை உதவி மருத்துவர், அய்யம்பாளையம், நாமக்கல் அவர்கள் புல எண்.161/2இல் உள்ள 29.64 சென்ட் மந்தைவெளி புறம்போக்கு நிலத்தில் கட்டிடம் கட்டிக் கொள்வதில் நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என தீர்மானம் நிறைவேற்றி தருமாறும் கோரியுள்ளார்.

அரசாணை (நிலை) எண். 75, நாள்.28.05.2007இல் பிற துறைகளுக்கு நிலமாற்றம் செய்ய தடை உள்ளதாலும், மனுதாரரின் 13.09.2022 ஆம் தேதிய கடிதத்தின்படியும், மேற்படி புல எண். 161/2இல் உள்ள 29.64 சென்ட் இடத்தில் புதிய கால்நடை மருந்தக கட்டிடம் கட்டிக் கொள்ள நகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என தெரிவிக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : அரசாணை (நிலை) எண். 75, நாள்.28.05.2007இன்படியும், கால்நடை பராமரிப்பு துறையின் கீழ் நல்லிபாளையம் கிராமம் புல எண். 161/2இல் உள்ள 29.64 சென்ட் இடத்தில் கால்நடை மருந்தகத்திற்கான கட்டிடம் கட்டிக் கொள்ள ஆட்சேபனை இல்லை என தெரிவிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4315/2022/எப்1)**

**தீர்மானம் எண். : 275, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21 :**

நாமக்கல் நகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் லாரி வாகனம் TN 88 3804 எண்ணுள்ள வாகனத்தின் 6 டயர்கள் தேய்மானம் ஆகியுள்ளதால், மேற்படி வாகனத்திற்கு புதியதாக 6 டயர்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,38,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4870/2022/எச்2)**

**தீர்மானம் எண். : 276, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22 :**

நாமக்கல் நகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் லாரி வாகனம் TN 88 3807 எண்ணுள்ள வாகனத்தின் 6 டயர்கள் தேய்மானம் ஆகியுள்ளதால், மேற்படி வாகனத்திற்கு புதியதாக 6 டயர்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,38,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4869/2022/எச்2)**

**தீர்மானம் எண். : 277, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23 :**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் டிராக்டர் வாகனம் TN 88 F 5619 எண்ணுள்ள வாகனத்தின் அரவை இயந்திரத்தின் பழுது பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.47,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4550/2022/எச்2)**

**தீர்மானம் எண். : 278, அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**